சிறகுகள் அமையம் | **SIRAKUKAL AMAIYAM**
இல. 21, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம், இலங்கை | siraku.org

வாசிப்பு மாதம் **2026**

# இளம் எழுத்துகள் 2026

பாடசாலை மாணவர்களுக்கான வாசிப்பு - படைப்பாக்கப் போட்டி
"வாசிப்பிலிருந்து படைப்பிற்கு..."

## அறிமுகம்

வாசிப்பு மாதம் 2026ஐ முன்னிட்டு, மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம், கற்பனைத்திறன், படைப்பாக்கச் சிந்தனை, எழுத்தாற்றல் மற்றும் ஆய்வுச் சிந்தனையை ஊக்குவிக்கும் நோக்கில் சிறகுகள் அமையத்தினால் "இளம் எழுத்துகள் 2026" பாடசாலை மாணவர்களுக்கான வாசிப்பு - படைப்பாக்கப் போட்டி ஏற்பாடு செய்யப்படுகிறது.

வாசிப்பிலிருந்து சிந்தனைக்கும், சிந்தனையிலிருந்து படைப்புக்கும் மாணவர்களை அழைத்துச் செல்வதுடன், அவர்களது படைப்புகளை அடையாளம் கண்டு ஊக்குவித்து, தெரிவுசெய்யப்படும் சிறந்த மற்றும் தனித்துவமான படைப்புகளை நூலாக வெளியிடுவதும் இம்முயற்சியின் நோக்கமாகும்.

## 01. போட்டியின் நோக்கங்கள்

- மாணவர்களிடையே தொடர்ச்சியான வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தல்.
- கற்பனை, படைப்பாற்றல், மொழித்திறன் மற்றும் சுய சிந்தனையை வளர்த்தல்.
- வயது மற்றும் தரநிலைக்கு ஏற்ப கதை, நன்னெறிக் கதை, விஞ்ஞானப் புனைவுக் கதை மற்றும் ஆய்வுக் கட்டுரை எழுதும் திறனை ஊக்குவித்தல்.
- மாணவர்களின் படைப்புகளை அடையாளம் கண்டு பொதுவெளியில் அறிமுகப்படுத்துதல்.
- பாடசாலைகள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் பங்களிப்புடன் வாசிப்பு மற்றும் படைப்பாக்கச் சூழலை வலுப்படுத்துதல்.

## 02. போட்டிப் பிரிவுகள்

| பிரிவு 01 \| தரம் 1-2 | வாசிப்பு & புத்தகங்கள் - ஓவியம் |
|---|---|
| கருப்பொருள் / தலைப்பு<br>"எனது புத்தகம் - எனது வாசிப்பு உலகம்" | புத்தகம், வாசிப்பு, நூலகம், பிடித்த கதை / கதாபாத்திரம் அல்லது மாணவரின் கற்பனை வாசிப்பு உலகத்தை ஓவியமாக வெளிப்படுத்தலாம்.<br>தாள் அளவு: A4 (210 × 297 mm). பென்சில் நிறம், கிரேயான், கலர் பென்சில், நீர்வண்ணம், போஸ்டர் நிறம் போன்றவற்றைப் பயன்படுத்தலாம். |

| பிரிவு 02 \| தரம் 3-5 | கதை |
|---|---|
| கருப்பொருள் / தலைப்பு<br>மாணவர் விருப்பத் தலைப்பு | மாணவரின் கற்பனை, வாசிப்பு மற்றும் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட கதையை எழுதலாம்.<br>சொல் வரம்பு: 80-100 சொற்கள். |

| பிரிவு 03 \| தரம் 6-7 | நன்னெறிக் கதை |
|---|---|
| கருப்பொருள் / தலைப்பு | நேர்மை, நட்பு, கருணை, பொறுப்பு, ஒற்றுமை, மனிதநேயம், இயற்கைப் பாதுகாப்பு, சமூகப் பொறுப்பு போன்ற கருத்துகளை |

| | |
|---|---|
| மாணவர் விருப்பத் தலைப்பு | அடிப்படையாகக் கொண்ட கதையை எழுதலாம். கதையின் ஊடாக ஒரு நன்னெறிச் செய்தி / வாழ்க்கைப் பாடம் வெளிப்பட வேண்டும்.<br>சொல் வரம்பு: 150-300 சொற்கள். |

| பிரிவு **04** \| தரம் **8-10** | விஞ்ஞானப் புனைவுக் கதை |
|---|---|
| கருப்பொருள் / தலைப்பு<br>மாணவர் விருப்பத் தலைப்பு | அறிவியல் சிந்தனையையும் கற்பனையையும் இணைத்து கதை எழுத வேண்டும். AI, ரோபோக்கள், விண்வெளி, எதிர்கால உலகம், புதிய கண்டுபிடிப்புகள், காலநிலை மாற்றம், எதிர்கால மருத்துவம், எதிர்காலக் கல்வி, நேரப்பயணம், எதிர்கால நகரங்கள் போன்ற தளங்களைப் பயன்படுத்தலாம்.<br>சொல் வரம்பு: 350-500 சொற்கள். |

| பிரிவு **05** \| தரம் **11-13** | ஆய்வுக் கட்டுரை |
|---|---|
| கருப்பொருள் / தலைப்பு<br>“வாசிப்பு - மாணவர்களையும் சமூகத்தையும் வலுப்படுத்தும் சக்தி” | வாசிப்பு மற்றும் கல்வி, வாசிப்பு மற்றும் சிந்தனைத்திறன், டிஜிட்டல் கால வாசிப்பு, பாடசாலை நூலகங்கள், கிராமப்புற வாசிப்பு வாய்ப்புகள், சமூக வாசிப்பு மையங்கள், வாசிப்பு மற்றும் தலைமைத்துவம், வாசிப்பு மற்றும் சமூகப் பொறுப்பு போன்ற விடயங்களை ஆய்வு செய்யலாம்.<br>சொல் வரம்பு: 600-800 சொற்கள். நூல்கள், கட்டுரைகள், இணையத் தகவல்கள், நேர்காணல்கள் போன்ற பயன்படுத்தப்பட்ட ஆதாரங்களை இயன்றவரை குறிப்பிட வேண்டும். |

## **03.** பங்குபற்றுவதற்கான தகுதி

- தரம் 1 முதல் தரம் 13 வரை கல்வி கற்கும் மாணவர்கள் பங்குபற்றலாம்.
- ஒரு பாடசாலையிலிருந்து பங்குபற்றும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு வரையறை இல்லை.
- மாணவர்கள் பாடசாலை ஊடாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ பங்குபற்றலாம்.
- பாடசாலைகள் சிறந்த படைப்புகளை மட்டும் முன்தெரிவு செய்ய வேண்டிய அவசியமில்லை; ஆர்வமுள்ள அனைத்து மாணவர்களையும் பங்குபற்ற ஊக்குவிக்கலாம்.

## **04.** பாடசாலை மற்றும் பொறுப்பாசிரியரின் பங்களிப்பு

ஒவ்வொரு பாடசாலையும் ஒரு பொறுப்பாசிரியரை நியமித்து போட்டியை ஒருங்கிணைக்கலாம். பொறுப்பாசிரியர் பின்வரும் பணிகளை மேற்கொள்ளலாம்:

- போட்டியை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துதல் மற்றும் பங்குபற்ற ஊக்குவித்தல்.
- மாணவர்களின் படைப்புகளைச் சேகரித்து, தேவையான விபரங்கள் இணைக்கப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்த்தல்.
- படைப்புகளைப் போட்டிப் பிரிவு வாரியாக ஒழுங்குபடுத்துதல்.
- பாடசாலை சார்பாக அனைத்து படைப்புகளையும் ஒரே பொதியில் அனுப்புதல்.

## **05.** பொதுவான போட்டி விதிமுறைகள்

- படைப்பு மாணவரின் சொந்தப் படைப்பாக இருக்க வேண்டும்.
- இணையம், நூல்கள் அல்லது பிறரிடமிருந்து பெறப்பட்ட படைப்புகளை மாணவரின் சொந்தப் படைப்பாக சமர்ப்பிக்கக் கூடாது.

- ஏற்கனவே வெளியிடப்பட்ட படைப்புகளை சமர்ப்பிக்கக் கூடாது.
- எழுத்துப் படைப்புகள் தமிழ் மொழியில் இருக்க வேண்டும்.
- ஒவ்வொரு மாணவரும் தமது பிரிவில் ஒரு படைப்பை சமர்ப்பிக்கலாம்.
- குறிப்பிடப்பட்டுள்ள சொல் வரம்பு / தாள் அளவைப் பின்பற்ற வேண்டும்.
- படைப்பு மாணவரின் வயது மற்றும் தரநிலைக்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.
- மாணவரின் சொந்த கற்பனை, வாசிப்பு, அனுபவம் மற்றும் சிந்தனைக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்.
- ஆய்வுக் கட்டுரையில் பயன்படுத்தப்பட்ட நூல்கள், கட்டுரைகள், இணையத் தகவல்கள், நேர்காணல்கள் உள்ளிட்ட ஆதாரங்களை இயன்றவரை குறிப்பிட வேண்டும்.

## 06. படைப்புடன் இணைக்க வேண்டிய விபரங்கள்

ஒவ்வொரு படைப்புடனும் பின்வரும் விபரங்களை தெளிவாக இணைக்க வேண்டும்:

- மாணவரின் முழுப்பெயர்
- தரம்
- பாடசாலை பெயர்
- போட்டிப் பிரிவு
- படைப்பின் தலைப்பு
- பெற்றோர் / பாதுகாவலர் தொடர்பு இலக்கம்
- பொறுப்பாசிரியர் பெயர் மற்றும் தொடர்பு இலக்கம்

குறிப்பு: தனிப்பட்ட முறையில் சமர்ப்பிக்கும் மாணவர்களுக்கு பொறுப்பாசிரியர் விபரங்கள் கட்டாயமல்ல.

## 07. மதிப்பீட்டு அடிப்படைகள்

| பிரிவு | மதிப்பீட்டு அம்சங்கள் |
|---|---|
| ஓவியம் | கற்பனை • படைப்பாற்றல் • கருப்பொருள் தொடர்பு • காட்சிப்படுத்தல் |
| கதை | கதை சொல்லும் திறன் • கற்பனை • தனித்துவம் • மொழிநடை |
| நன்னெறிக் கதை | நன்னெறிக் கருத்து • கதை அமைப்பு • கற்பனை • மொழிநடை |
| விஞ்ஞானப் புனைவுக் கதை | அறிவியல் சிந்தனை • கற்பனை • தனித்துவம் • கதை அமைப்பு |
| ஆய்வுக் கட்டுரை | ஆய்வு அணுகுமுறை • தகவல் / ஆதாரப் பயன்பாடு • பகுப்பாய்வு • சமூகச் சிந்தனை • மொழிநடை |

மாணவர்களின் வயது மற்றும் தரநிலையைக் கருத்திற்கொண்டு மதிப்பீடு மேற்கொள்ளப்படும்.

## 08. சான்றிதழ்கள் மற்றும் அங்கீகாரம்

- தகுதியான படைப்பைச் சமர்ப்பித்து பங்குபற்றும் ஒவ்வொரு மாணவருக்கும் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்படும்.
- சிறந்த படைப்புகளுக்கு விசேட அங்கீகாரம் வழங்கப்படும்.
- போட்டியை ஒருங்கிணைக்கும் பொறுப்பாசிரியர்களின் பங்களிப்பும் பாராட்டப்படும்.

## **09.** தெரிவுசெய்யப்படும் படைப்புகளின் நூல் வெளியீடு

போட்டியில் பெறப்படும் படைப்புகளில் இருந்து தெரிவுசெய்யப்படும் சிறந்த மற்றும் தனித்துவமான மாணவர் படைப்புகள் தொகுக்கப்பட்டு சிறப்பு நூலாக வெளியிடப்படும்.

"உங்கள் படைப்பு ஒரு போட்டிக்காக மட்டும் அல்ல; ஒரு புத்தகத்தின் பக்கமாக மாறலாம்!"

## **10.** தபால் மூலம் சமர்ப்பிக்கும் முறை

படைப்புகளை உரிய அளவு / சொல் வரம்பிற்கு ஏற்ப தயாரித்து, தேவையான மாணவர் விபரங்களுடன் அனுப்ப வேண்டும். தபால் உறையின் மேல் கீழ்க்கண்டவாறு தெளிவாக குறிப்பிடவும்:

"இளம் எழுத்துகள் **2026**"
போட்டிப் பிரிவு: ______________

அனுப்ப வேண்டிய முகவரி:
"இளம் எழுத்துகள் **2026**"
சிறகுகள் அமையம்
இல. **21**, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

பாடசாலை ஊடாக பல மாணவர்களின் படைப்புகள் அனுப்பப்படுமாயின், ஒவ்வொரு படைப்புடனும் மாணவர் விபரங்களை இணைத்து, படைப்புகளைப் பிரிவு வாரியாக ஒழுங்குபடுத்தி ஒரே பொதியில் / உறையில் அனுப்பலாம்.

தபாலில் அனுப்புவதற்கு முன் மாணவரின் பெயர், தரம், பாடசாலை, போட்டிப் பிரிவு மற்றும் தொடர்பு விபரங்கள் சரியாக உள்ளனவா என்பதை உறுதிப்படுத்தவும்.

## **11.** சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி

# 31.10.2026

படைப்புகள் 31 அக்டோபர் 2026க்குள் சிறகுகள் அமையத்தைச் சென்றடைய வேண்டும். தபால் விநியோகத்திற்கான காலத்தைக் கருத்திற்கொண்டு முன்கூட்டியே அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

## **12.** தொடர்புகளுக்கு

**076 286 0975 | 076 871 2817 | 077 052 3495**
**076 672 9289 | 076 277 0566**
**siraku.org**

## எமது நோக்கம்

வெற்றியாளர்களை மட்டும் தேடுவதல்ல எமது நோக்கம். வாசிக்கச் செய்வோம்; சிந்திக்கச் செய்வோம்; கற்பனை செய்யச் செய்வோம்; வரையச் செய்வோம்; எழுதச் செய்வோம்; ஆய்வு செய்யச் செய்வோம்; மாணவர்களின் படைப்புகளை வெளிக்கொண்டு வருவோம்.

"வாசிப்பிலிருந்து படைப்பிற்கு... படைப்பிலிருந்து புதிய தலைமுறைக்கு!"

சிறகுகள் அமையம் | **SIRAKUKAL AMAIYAM**